**நகர்மன்றம்,**
**போடிநாயக்கனூர் , நாள்.28.03.2022**

2022ம் ஆண்டு மார்ச் மாதம் 28.03.2022ம் தேதி திங்கள்கிழமை காலை 11.00 மணிக்கு நடைபெற்ற சாதாரண கூட்ட நடவடிக்கைகள்

முன்னிலை :- திருமதி.ச.ராஜராஜேஸ்வரி,
நகர்மன்ற தலைவர்.

❖ **பொருள் எண்– 1:**

இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் பிப்ரவரி 2022ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பதிவு செய்யலாம்.

(நக.எண். 1103/2020/சி1)

**தீர்மான எண் : 1 –** பதிவு செய்யப்பட்டது.

❖ **பொருள் எண்– 2:**

இந்நகராட்சிப் பொறியாளர் அவர்களின் பிப்ரவரி 2022ம் மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :** பதிவு செய்யலாம்.

(நக.எண். 1103/2020/சி1)

**தீர்மான எண் : 2–** பதிவு செய்யப்பட்டது.

❖ **பொருள் எண்– 3:**

இந்நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், வணிகப் பகுதிகள், பேருந்து நிலையம், சந்தை போன்ற பொதுமக்கள் அதிகமாக கூடும் இடங்களில் சிறிய அளவிலான குப்பைத்தொட்டிகள் (Little Bins) வைத்திட தூய்மை இந்தியா திட்டம் 2.0 ல் அறிவுறுத்தப்பட்டுள்ளது அதனடிப்படையில் நகராட்சியில் 50 இடங்களில் 100 குப்பைத்தொட்டிகள் வைப்பதற்கு உத்தேச செலவினம் ரூ 2,00,000/. ஆகும். அதனை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.0591/2022/எச்2)**

**தீர்மான எண் : 3–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **பொருள் எண்– 4:**

போடிநாயக்கனூர் நகராட்சி பகுதியில் தற்போது வீடுகளின் எண்ணிக்கை 20,252 ம் மற்றும் தெருக்களின் எண்ணிக்கை 472 ம் உள்ளது. இத்தெருக்களில் சாக்கடை மண் (Silt) எடுப்பதற்கென்று தனியாக வாகனம் எதுவும் இல்லை. இதனால் பொதுமக்களிடமிருந்து புகார் வந்த வண்ணம் உள்ளது. சிறிய தெருக்களில் உள்ளே சென்று சாக்கடை மண்ணை அகற்றுவதற்கு ஏதுவாக சிறிய வகை Tractor with Tippor Trailor ஐ புதிதாக வாங்கி பயன்படுத்தலாம். நகராட்சியின் நிதிநிலைமையை கருத்தில் கொண்டு ஏற்கனவே பொதுசுகாதார பிரிவில் கொரானா நோய் தடுப்பு பணிக்கு பயன்படுத்தப்படும் டிராக்டர் வாகனம் TN 60 G 0735 – ல் புதிதாக டிப்பர் டிரைலர் வாங்கி பொருத்தி சாக்கடை மண் அகற்றுவதற்கு பயன்படுத்தலாம். உத்தேச செலவினம் ரூ 2,00,000/. ஆகும். அதனை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.0590/2022/எச்2)**

**தீர்மான எண் :** 4– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ <u>பொருள் எண்– 5:</u>

போடிநாயக்கனூர் நகராட்சி பகுதிகளில் தூய்மை பணியாளர்கள் மூலம் வீடுதோறும் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பையென தரம் பிரித்து வாங்கப்படுகிறது. மக்கும் குப்பைகளை இந்நகராட்சியில் இயங்கி வரும் நான்கு எண்ணிக்கையிலான நுண் உரமாக்கும் மையத்திற்கு கொண்டு செல்லப்பட்டு உரம் தயாரிக்கப்படுகிறது. மேற்கண்ட நான்கு நுண் உரமாக்கும் மையத்திற்கு உரிய சேவைப்பகுதிகள் தூய்மை பணியாளர்கள் இயக்கும் BOV வாகன ஒதுக்கீடு மற்றும் வருகை சுற்று எண்ணிக்கை மக்கும் குப்பைகளின் அளவு ஆகியவற்றை தெளிவாக குறிப்பிடும் வகையில் ஒவ்வொரு மையத்திற்கும் தலா ஒன்று எண்ணிக்கையிலான மொத்தம் நான்கு போர்டுகள் (எழுது பலகைகள்) வைப்பதற்கு உத்தேச செலவினம் ரூ 15,000/. ஆகும். அதனை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.0588/2022/எச்2)**

**தீர்மான எண் :** 5– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ <u>பொருள் எண்– 6:</u>

இந்நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ், வீடுகள் தோறும் பேட்டரி வாகனங்கள் மூலமாகவும், தள்ளுவண்டிகள் மூலமாகவும் கழிவுகள் பெறப்பட்டு வருகிறது. இந்நிலையில் பெரும்பாலான தள்ளுவண்டிகள் முற்றிலும் பழுதடைந்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளன. எனவே பேட்டரி வாகனங்கள் செல்ல முடியாத குறுகலான தெருக்களில் கழிவுகளை வாங்கும் பணியில் தொய்வு ஏற்பட்டுள்ளது. எனவே திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் முக்கியத்துவம் கருதியும் பொது சுகாதார அவசர அவசியம் கருதியும் புதிதாக 50 தள்ளுவண்டிகள் வாங்குவதற்கு உத்தேச செலவினம் ரூ 15,00,000/. ஆகும். அதனை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :–</u>

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.0589/2022/எச்2)**

**தீர்மான எண் :** 6– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ <u>பொருள் எண்– 7:</u>

இந்நகராட்சி வார்டு எண்–29, 7 வது பகுதி நகரவை பள்ளியில் வடக்கு பக்கம் உள்ள பள்ளியில் மேற்கூரை மிகவும் மோசமான நிலையில் இருப்பதாலும்,புதிதாக மேற்கூரை அமைப்பதற்கும் ,மேற்கு பக்கமும் கிழக்கு பக்கமும் மேல்தளத்தில் புதிதாக ஒடுகள் அமைக்கவும் உத்தேச மதிப்பீடு ரூ.10,00,000/–க்கு தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது. மேற்காணும் மதிப்பீட்டு தொகையினை நகராட்சி கல்விநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1)அனுமதிக்கலாம்.

2)மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண். 0627/2022/இ1)**

**தீர்மான எண் :** 7– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்– 8:</u>**

இந்நகராட்சி வார்டு எண்–13, அம்மா உணவகத்தில் உள்ள சமையல் கூடம் மற்றும் சாப்பிடும் அறையின் தரை தளம் பழுதடைந்து மிகவும் மோசமாகவும் உபயோகத்திற்கு சிரமமாகவும் இருப்பதால் அதனை சரிசெய்ய உத்தேச மதிப்பீடு ரூ.8,00,000/–க்கு தயார் செய்து வைக்கப்பட்டுள்ளது. மேற்காணும் மதிப்பீட்டு தொகையினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :**

1)அனுமதிக்கலாம்.

2)மதிப்பீட்டிற்கு நிர்வாக அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண். 0626/2022/இ1)**

**தீர்மான எண் : 8–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்– 9:</u>**

15வது நிதிக்குழு மானியம் (UnTied) 2020-21ன் கீழ் வார்டு எண்–10, வ,உ.சி நகர் நடுத்தெருவில் பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணிக்கு (120012R120) 25.01.2022ம் தேதி ஒப்பந்தப்புள்ளி முதல் முறையாக கோரியதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது.

1. திரு.L.எல்லப்பன்,நகராட்சி ஒப்பந்தகாரர்,போடிநாயக்கனூர்.

2.திரு.S.வேலுச்சாமி, நகராட்சி ஒப்பந்தகாரர்,ஆண்டிபட்டி.

| பணி விபரம் | மதிப்பீடு ரூ | திரு.L.எல்லப்பன், ஒப்பந்தகாரர், போடிநாயக்கனூர். | திரு.S.வேலுச்சாமி, ஒப்பந்தகாரர், ஆண்டிபட்டி. |
|---|---|---|---|
| வார்டு எண்–10, வ,உ.சி நகர் நடுத்தெருவில் பேவர் இயந்திரம் மூலம் தார்சாலை அமைக்கும் பணி(120012R120) | ரூ.16,00,000/– | ரூ.13,98,162/– | ரூ.13,65,031/– |

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டைவிட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. அவற்றில் குறைவாக வழங்கியுள்ள திரு.S.வேலுச்சாமி, ஆண்டிபட்டி ஒப்பந்ததாரரின் விலைவிகிதத்தினை குறைத்து தருமாறு 28.02.2022ம் தேதி பேரப்பேச்சு நடத்தியதில் சந்தையில் கட்டுமான பொருட்களில் விலை மதிப்பீட்டை விட கூடுதலாக இருப்பதாலும், மின்சாதன பொருட்களின் விலை மேலும் உயர வாய்ப்பு இருப்பதாலும், பணியாளர் சம்பளம் தரக்கட்டுப்பாட்டு விலை விபர அட்டவணையை விட கூடுதலாக இருப்பதாலும் விலையை குறைக்க இயலாது என கடிதம் அனுப்பியுள்ளார். எனவே அன்னார் கோரிய ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:** வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் மதிப்பீட்டை விட கூடுதலாக வரப்பெற்றுள்ளது. மேற்படி பணிக்கு கோரிய ஒப்பந்தப்புள்ளி முதல் அழைப்பு ஒப்பந்தப்புள்ளியாக இருப்பதால் இதில் மதிப்பீட்டைவிட கூடுதலாக வரப்பெற்றதில் குறைவாக 4.94% வழங்கியுள்ள திரு.S.வேலுச்சாமி, ஆண்டிபட்டி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்தும் மேலும் இப்பணிக்காக கூடுதல் செலவினத்தொகையை இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்வது குறித்தும் மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

**(ந.க.எண். 0237/2021/இ1)**
**தீர்மான எண் : 9–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்– 10:</u>**

போடிநாயக்கனூர் நகராட்சியில் இயங்கி வரும் TN60V -1693 ஈப்பு வாகனத்தில் சீட்கவர், அப்பர்செட், புளோர் மேட், கட்மேட், சாக்கப்சர்–ல் உள்ள பழுதுகளை சரிசெய்வதற்கு அதற்கான உத்தேச செலவினம் ரூ.58,000/–னை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலககுறிப்பு**

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண். 0614/2022/இ1)**
**தீர்மான எண் : 10–** அனுமதிக்கலாம் .

❖ **<u>பொருள் எண்– 11:</u>**

இந்நகராட்சியில் பொதுசுகாதார பிரிவில் சுகாதார பணிகளை மேற்கொள்வதற்கு தினமும் கீழ்க்கண்ட Battery operator vechile (BOV) இயக்கப்பட்டு வருகிறது. இவ்வாகனங்களில் அடிக்கடி பழுதுகள் ஏற்படுவதால் குப்பைப் கழிவுகளை தரம்பிரித்து வாங்கி அதனை MCC– க்கு கொண்டு சென்று உரம் தயாரிப்பதில் தொய்வு ஏற்படுகிறது. எனவே பொதுசுகாதார அவசர அவசியம் கருதி முதல் கட்டமாக 10 nos BOV வாகனங்களுக்கு கீழ்க்கண்ட விபரப்படி பழுது பணிகளை மேற்கொள்ளலாம். ஊத்தேச செலவினம் ரூ 6,00,000/–த்திற்கு மன்றத்தின் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரி பணிகளை மேற்கொள்ள முன் அனுமதி வேண்டப்படுகிறது.

**BOV பழுது பணிகளின் விபரம்**

| | | |
|---|---|---|
| 1 | BOV NO 10/20 | Wire kit,Controller ,Hand break , Tube,Tire, Charger,Battery |
| 2 | BOV NO 12/20 | Break shoe,Break petal, Hand break,Wire kit,Tyre tube,Battery,Charger,Controller |
| 3 | BOV NO 20/20 | Break shoe,Mount set, Converter,Battery, Charger,Tyre tube |
| 4 | BOV NO 7/14 | Doom lighi, Controller,Mount set, Hand break, Wire kit, Tyre tube,Charger ,Battery |

| | | |
|---|---|---|
| 5 | BOV NO 6/14 | Wire kit, Mount set, Controller, Charger, Battery |
| 6 | BOV NO 4/14 | Mount set,Wire kit, Tyre,Tube, Converter,Hand break, Battery,Charger |
| 7 | BOV NO 16/14 | Motor ,Controller, Break shoe, Hand Break,Doom light, Battery,Charger |
| 8 | BOV NO 10/14 | Fork set, mount set, convertor,Wire kit, Break pedal,Break shoe,Key set, Charger,Battery, Tyre tube |
| 9 | BOV NO 2/20 | Key set, Break shoe, Hand break, Converter, Tyre tube, Charger ,Battery |
| 10 | BOV NO 5/20 | Mount set, Wire kit, Break shoe,Hand break, Converter, Tyre tube, Charger,Battery |

மேற்கண்ட வாகனங்களின் பழுதுகளை நீக்கி பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவின தொகை ரூ **6,00,000/.** ஆகும். அதனை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–**

பொது சுகாதார அவசர அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.0582/2022/எச்2)**

**தீர்மான எண் : 11–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **பொருள் எண்– 12:**

இந்நகராட்சி பொதுசுகாதாரபிரிவிற்கு அனுமதிக்கப்பட்ட துப்புரவு பணியாளர் பணியிடம் **146** தவிர அரசாணை எண் **101**, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை,நாள்.**30.04.1997**ன் படி இந்நகராட்சிக்கு தேவையான துப்புரவு பணியாளர் அளவுகோலின்படி **270** பணியிடங்கள் தேவைப்படுவதால் **54** பணியிடங்களை திடக்கழிவு மேலாண்மைத்திட்டத்தின் கீழ் பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள நகர்மன்ற தீர்மான எண்.**267.** நாள்.**30.06.2015**ல் ஒப்புதல் பெறப்பட்டு, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் கடித எண்.**16096**/பி**3/2016.** நாள்.**27.06.2016**ல் உரிய அனுமதி வழங்கப்பட்டது. மேற்படி உத்தரவின் அடிப்படையில் அவர்லேண்ட இன்ஜினியரிங் ஒர்க்ஸ்,சென்னை நிறுவனத்திற்கு நீட்டிக்கப்பட்ட பணி உத்திரவு **31.03.2022**உடன்முடிவடைவதால் குப்பைகள் சேகரப்படுத்துதல், அப்புறப்படுத்துதல் போன்ற அத்தியாவசியப்பணிகள் முக்கியத்துவம் கருதியும், பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும் மேலும் மூன்று மாதங்கள் **30.06.2022**வரை அல்லது புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவது இதில் எது முந்தியதோ அது வரை பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள பணி நீடித்து உத்தரவு வழங்கவும் மேலும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.**75.00/–**லட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களிடம் உரிய பின்னேற்பு பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :–** மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்.3777 /2019/எச்1)**

**தீர்மான எண் : 12–** 1.உத்தேச செலவினம் ரூ.75.00/– இலட்சத்தினை ரூ.27.00/– இலட்சம் என திருத்தி வாசித்தமைக்கு மன்றத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.
2.அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

<u>பொருள் எண்– 13:</u>

போடிநாயக்கனூர் நகராட்சி பகுதிகளில் கொசுப்புழு ஒழிப்பு,கொசு ஒழிப்பு புகை மருந்து அடித்தல் போன்ற பணிகளுக்காக 1939ம் ஆண்டு தமிழ்நாடு மக்கள் நலவாழ்வு சட்டம் விதி 53 (1) (2) மற்றும் (3)ன் படி தேவைக்கேற்ப கொசுப்புழு ஒழிப்பிற்கு தற்காலிக மஸ்தூர்கள் மூலம் மேற்படி பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. நகராட்சி நிர்வாக ஆணையர்,சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண் 1819/2016/L3 , நாள். 08.11.2016ம் தேதிய கடிதத்தில் தற்காலிக மஸ்தூர் பணிகளை ஒப்பந்த தொழிலாளர்கள் மூலம் மேற்கொள்ள தெரிவித்ததற்கிணங்க ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு 60 தற்காலிக பணியாளர்களை அவர்லேண்ட் இன்ஜினியரிங் ஒர்க்ஸ் பிரைவேட் லிமிடேட், சென்னை. நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்த அனுமதி பெறப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் மேற்படி பணியாளர்களின் பணி நீட்டிக்கப்பட்ட உத்திரவு 31.03.2022உடன் முடிவடைவதால் அத்தியாவசியப்பணிகள் முக்கியத்துவம் கருதியும், பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும் மேலும் மூன்று மாதங்கள் 30.06.2022வரை அல்லது புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவது இதில் எது முந்தியதோ அது வரை பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள பணி நீடித்து உத்தரவு வழங்கவும் மேலும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.16.50/–லட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :–</u> மன்றம் அனுமதிக்கலாம்.
**(ந.க.எண் 6709/2013/எச்1)**
**தீர்மான எண் :** 13– அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ <u>பொருள் எண்– 14:</u>

அரசாணை எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.04.1997ன் படியும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.28369/13/2018 நாள்.22.11.2018ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒப்பந்த தொழிலாளர்கள் மூலம் பணிக்கு 50 துப்புரவு பணியாளர்களை தனியார் வாயிலாக Out Sourcing முறையில் மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்படும். தினக்கூலி ஊதிய அடிப்படையில் பணியமர்த்தி துப்புரவு பணிகள் மேற்கொள்ள மின்னனு ஒப்பந்தப்புள்ளி 07.01.2019ம் தேதி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Ourland Engineering Works Pvt Ltd, Chennai நிறுவனத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.355, நாள்.31.01.2019ல் மன்ற அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் நீட்டிக்கப்பட்ட பணி உத்திரவு 31.03.2022உடன் முடிவடைவதால் அத்தியாவசியப்பணிகள் முக்கியத்துவம் கருதியும், பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும் மேலும் மூன்று மாதங்கள் 30.06.2022வரை அல்லது புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவது இதில் எது முந்தியதோ அது வரை பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள பணி நீடித்து உத்தரவு வழங்கவும் மேலும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.36.00/–லட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு :–</u> பொது சுகாதார அவசர, அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண் 5086/2018/எச்2)**
**தீர்மான எண் :** 14– 1.உத்தேச செலவினம் ரூ.36.00/– இலட்சத்தினை ரூ.24.50/– இலட்சம் என திருத்தி வாசித்தமைக்கு மன்றத்தால் அனுமதி வழங்கப்படுகிறது.
2.அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

❖ **<u>பொருள் எண்– 15:</u>**

அரசாணை எண்.101, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை நாள்.30.04.1997ன் படியும் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.28369/13/2018 நாள்.22.11.2018ம் தேதிய கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் ஒப்பந்த தொழிலாளர்கள் மூலம் பணிக்கு 70 துப்புரவு பணியாளர்களை தனியார் வாயிலாக Out Sourcing முறையில் மாவட்ட ஆட்சியரால் நிர்ணயம் செய்யப்படும். தினக்கூலி ஊதிய அடிப்படையில் பணியமர்த்தி துப்புரவு பணிகள் மேற்கொள்ள மின்னனு ஒப்பந்தப்புள்ளி 27.12.2018ம் தேதி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கிய Ourland Engineering Works Pvt Ltd, Chennai நிறுவனத்திற்கு நகர்மன்ற தீர்மான எண்.351, நாள்.28.12.2018ல் மன்ற அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கப்பட்டு பணிமேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்நிலையில் நீட்டிக்கப்பட்ட பணி உத்திரவு 31.03.2022உடன் முடிவடைவதால் அத்தியாவசியப்பணிகள் முக்கியத்துவம் கருதியும், பொதுசுகாதார அவசர அவசியம் கருதியும் மேலும் மூன்று மாதங்கள் 30.06.2022வரை அல்லது புதிய ஒப்பந்தப்புள்ளி கோருவது இதில் எது முந்தியதோ அது வரை பொதுசுகாதாரப்பணி மேற்கொள்ள பணி நீடித்து உத்தரவு வழங்கவும் மேலும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.36.00/–லட்சத்தினை நகராட்சி பொதுநிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு :–</u>** பொது சுகாதார அவசர, அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 3791/2018/எச்2)

**தீர்மான எண் : 15–** அலுவலக குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

(ஒம்) திருமதி.ச.ராஜராஜேஸ்வரி
நகர்மன்ற தலைவர்

// உண்மைநகல் //

ஆணையாளார்
போடிநாயக்கனூர் நகராட்சி